ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2370/20 – 2024 පෙබරවාරි මස 09 වැනි සිකුරාදා – 2024.02.09
2370/20 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

33 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. DS/VW/LA/PO/02.
காணி அமைச்சின் இல. 4-3/11/2016/PT/335.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் மேற்கு, சங்கானை பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமார் ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்குரிய நட்டஈடாக ஆயிரம் ரூபா (ரூ. 1,000.00) பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர் பெற்றுக்கொள்வதற்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் LA/1201/2023 இன் கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளதென்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

கவிதா உதயகுமார்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் மேற்கு,
சங்கானை.
2024, பெப்புருவரி 05.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| கிராம அலுவலர் பிரிவு | : | சங்கானை கிழக்கு, J/178 |
| காணியின் பெயர் | : | "பற்றங்கடவை" |
| நில அளவைப் படத்தின் இல. | : | பிபியா 2978 |
| துண்டு இல. | : | 01 |
| விஸ்தீரணம் | : | 0.1517 ஹெக்டயார் |
| காணியின் அமைவிடம் | : | |

வடக்கு - இராசையா மனோகரன், பத்மராஜா கோகுலன் மற்றும் சின்னத்தம்பி குமாரசாமி உரிமை கோரும் காணிகள்;

கிழக்கு - சின்னத்தம்பி குமாரசாமி, பொன்னுத்துரை நேசலிங்கம் மற்றும் மனைவி குணராணி உரிமை கோரும் காணிகள் ;

தெற்கு - பொன்னுத்துரை நேசலிங்கம் மற்றும் மனைவி குணராணி உரிமை கோரும் காணி மற்றும் பொன்னாலை யாழ்ப்பாணம் வீதி ;

மேற்கு - பொன்னாலை யாழ்ப்பாணம் வீதி மற்றும் இராசையா மனோகரன் உரிமை கோரும் காணி.

EOG 02-0052

1A – G 41384 – 14 (2024/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.